விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 297 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை (11.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

வவுனியா ஓமந்தையில் காணிப் பிணக்குக் காரணமாக

## மிளகாய்த் தூளை வீசி விட்டு குடும்பஸ்தர் துரத்தித் துரத்தி வெட்டிப் படுகொலை

(வவுனியா)

மிளகாய்த் தூளை வீசி விட்டு குடும்பஸ்தர் ஒருவர் துரத்தித் துரத்தி வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா ஓமந்தை கதிர வேலு பூவரசன்குளம் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளங்கோ (வயது-38) என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை, கதிர வேலுபூவரசன்குளம் பகுதியில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கிடையில் காணி தொடர்பாக சிறிய

15

## தமிழரசுக் கட்சி யாழில் வேட்புமனு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை கையளித்துள்ளது.

வேட்புமனுவை கையளிப்பதற்கு முன்பதாக யாழில் உள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில், தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய

15

# அமெரிக்காவின் ஆதரவு இலங்கைக்குத் தொடரும்

## அமெரிக்க கடற்படை அதிகாரி ஜனாதிபதி அநுரவிடம் தெரிவிப்பு


(கொழும்பு)

**அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவு இலங்கைக்குத் தொடரும் என அமெரிக்க கடற்படை அதிகாரி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் உறுதியளித்துள்ளார்.**

அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர், ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்தார்.

இந்து சமுத்திரத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்களுக்கு முகங்

15



## மருத்துவர் அர்ச்சுனா

சுயேட்சையாகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தினை மருத்துவர் அர்ச்சுனா செலுத்தினார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று

15

## 17 இந்திய மீனவர்கள் விடுதலை

(மன்னார்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த நிலையில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களையும் தலா 50 ஆயிரம் ரூபாய் தண்டப் பணத்தில் விடுவிக்க

15

புலிகளின் ஆயுதங்களைத் தேடி

## முள்ளிவாய்க்காலில் 3ஆவது நாளாக அகழ்வு



15

## 11 ஆயிரம் ஏக்கர் காணியை விவசாயிகளுக்கு வழங்குங்கள்

ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்பு

(கொழும்பு)

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 11,000 ஏக்கர் காணியை குறுகிய கால பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று வியாழக்கிழமை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய ஐந்து ஏக்கரை விட குறை

15

ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு

## யாழில் தவராசா தலைமையில் உதயமானது

(யாழ்ப்பாணம்)

யாழில் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா தலைமையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்

15

## புத்தூரில் கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(புத்தூர்)

புத்தூரில் குடும்பப் பெண் ஒருவர் நேற்று கிணற்றிலிந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் புத்தூர் நவக்கிரி வடக்கைச் சேர்ந்த செல்வராசாமகேஸ்வரி

15

கரணவாய் தெற்கில்

## தீயில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(கரணவாய்)

கரணவாய் தெற்கு மாந்தோப்பில் தீயில் எரிந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.


இதில் அதே இடத்தைச் சேர்ந்த குணராஜலிங்கம் ஞானேஸ்வரி (வயது-70) என்பவரே சடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் உறவினர்கள் ஒருவரின் வீட்டுக்குச் சென்று விட்டு



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மண்ணில் சிறப்புற இடம்பெற்ற தாய்த்தமிழ் பேரவையின் 4ஆம் ஆண்டு நிறைவு விழா
















(படங்கள்-பாலநாதன் சதீசன்)

தாய்த்தமிழ் பேரவையின் 4 ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த (04.10.2024) மாலை புதுக்குடியிருப்பு பேருந்து நிலைய வளாகத்தில் மிகவும் சிறப்பாக ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இடம்பெற்றிருந்தது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தாய்த்தமிழ் பேரவையில் பணியாற்றி மக்களுக்காக சமூக தொண்டாற்றி உயிர்த்தியாகம் செய்து மரணித்த 12 உறவுகளின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்று, வரவேற்புரை, நடனம், சிறப்புரைகள், கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தது. சமூகதொண்டாற்றி வரும் குறித்த தாய் தமிழ் பேரவை அமைப்பானது பெண்களுக்கான சேமிப்பு, சுயதொழில் ஊக்குவிப்பு, நினைவேந்தல் நிகழ்வுகள், வீடற்ற குடும்பங்களுக்கு வீடு வழங்கலும் புனரமைப்பும், இலவச கண் பரிசோதனை, மூக்குக்கண்ணாடி வழங்கல், விளையாட்டு நிகழ்வுகளை ஊக்கு வித்தல், வாழ்வாதார உதவி, இலவச தையல் பயிற்சி , மருத்துவ உதவி, இடர்கால உதவி ,கல்விக்கான உதவி , அமரர் புஸ்பராசா நற்பணிமன்றத்தின் இலவச அமரர் ஊர்தி சேவை, வறியோருக்கான மரணசடங்கு என பல்வேறுபட்ட அளப்பெரிய பணிகளை ஆற்றிவருகின்றது.

குறித்த நிகழ்வில் முல்லை கல்வி வலயத்தின் முன்னாள் பிரதிக்கல்விப் பணிப் பாளர் ச.நாகரட்ணம், முல்லை கல்வி வலயத்தின் முன்னாள் பிரதிக்கல்விப் பணிப் பாளர் பொ.பேரின்பநாயகம், புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ப.பரணிதரன், புதுக்குடியிருப்பு சிறிசுப்ரமணிய வித்தியாலய முன்னாள் அதிபர் இ.செல்வநாயகம், தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.ரூபன், தாய்த்தமிழ் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் த.நவநீதன், தாய்த்தமிழ் பேரவையின் மகளிர் அணி தலைவி ப.குணசிவா, கவிஞர் யோ.புரட்சி, சமூக செயற்பாட்டாளர்கள், தாய்த்தமிழ் பேரவையின் உறுப்பினர்கள் , பொதுமக்கள் என ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். (3481)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த கால அட்டூழியங்களுக்கு அநுர அரசு நீதி வழங்க வேண்டும்

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

(ஜெனீவா)

**பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களிற்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜெனீவாவிற்கான பிரதி இயக்குநர் லூசி மக்கேர்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,இலங்கையில் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் , கடந்த கால அட்டூழியங்களிற்கு நீதியைத் தேடும் முயற்சிகளிற்கு இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானம் மிகவும் அவசியமானது.

பாதிக்கப்பட்டவர்களிற்கும் அவர்களது குடும்பத்தவர்களிற்கும் நீதி மறுக்கப்படுவது தொடர்ந்தால் இலங்கை தொடர்பில் சர்வதேச நடவடிக்கை அவசியம்.



பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களிற்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும், நீதியைத் தேடும் பாதிக்கப்பட்டவர்களை, மனித உரிமை செயற்பாட்டாளர்களை பாதுகாப்பு படையினர் துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும். முன்னைய அரசாங்கங்களினால் தடுக்கப்பட்ட குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி)

# 50 பயணிகளுடன் சென்ற பேருந்தில் தீ பரவல்



(இரத்தினபுரி)

இரத்தினபுரி - கொழும்பு வீதியில் மாதம்பே பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

அதன்படி நேற்றுக் காலை 7.30 மணியளவில் எம்பிலிப்பிட்டியவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து ஒன்றே தீக்கிரையாகியுள்ளது.

பேருந்தில் சம்பவம் இடம்பெற்ற போது சுமார் 50 பயணிகள் அமர்ந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த விபத்தில் எவருக்கும் காயமோ அல்லது பாரிய காயமோ ஏற்படவில்லை.

பிரதேசவாசிகளின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும் பேருந்து முற்றாக எரிந்து நாசமானது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)

# மின் கட்டண திருத்தம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்களில் திருத்தம் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயப்பட உள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் தொடர்பிலான விலைப் பொறிமுறைமையை மாற்றியமைப்பது தொடர்பில் ஆராயப்படுவதாக மின்சக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு கூடுதல் நிவாரணம் அளிக்கக்கூடிய மின் கட்டண முறையை அறிமுகம் செய்யும் நோக்கில் விலைச் சூத்திரம் மீளாய்வு செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த மீளாய்வின் பின்னர், புதிய விலைப் பொறிமுறைமையை ஜனாதிபதியும் துறைசார் அமைச்சருமான அநுர குமார திஸாநாயக்க அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

அதன் பின்னர், இந்த யோசனை புதிய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# பதில் பிரதம நீதியரசர் பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

இலங்கையின் பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினீ பொ்னாண்டோ நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (நி)

# பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை விமல் வீரவன்ச அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)


எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் கட்சி அறிவித்துள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியத்தையுடைய அரசியல் இயக்கம் என்பதாலும் ஜேவிபியின் வரலாற்று பாரம்பரியத்தை மதிக்கும் அதற்கு உரித்தான கட்சி என்பதாலும் நாங்கள் ஜனாதிபதியை அதிகாரத்திற்கு கொண்டுவந்த மக்கள் ஆணையை பாதுகாப்பது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளோம். என விமல் வீரவன்சவின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைப்பதற்காக தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் கூட்டணிக்கட்சிகளின் ஆதரவின்றி அநுரகுமார திஸா நாயக்க ஆட்சி புரியும் நிலையை ஏற்படுத்துவது



தனது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)



# தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

## ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசாங்கத்துடன் இணைந்து தேசத்தை மீளக் கட்டியெழுப்ப தன்னால் இயன்ற உதவிகளை வழங்கியதாகவும் ஆனால் பொது மக்களுக்கு மாற்றம் தேவை என்பது புலனாகிறது என்றும் அறிக்கை ஒன்றை வெளியிட்டு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்திலும் பாராளுமன்றத்திலும் மாற்றத்திற்கான மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிப்பதாகக் கூறிய அவர், பொதுத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை.

அதற்கு பதிலாக, தன்னை முன்னர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்த அநுராதபுர மக்களுக்கு சேவை செய்வதில் தான் பணியாற்றுவேன்.


எவ்வாறெனினும், எதிர்காலத்தில் தேசத்திற்கு தேவைப்படும் போதெல்லாம் தனது நிபந்தனையற்ற உதவிகளை வழங்குவதாக ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘குமுழமுனை சுப்பர் லீக்’ சம்பியனான குருந்தூர்

குமுழமுனை சுப்பர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கிண்ணத்தை சுவீகரித்த குருந்தூர் அணி.

முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய "குமுழமுனை சுப்பர் லீக்" உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.



இந் நிகழ்வில் முல்லை. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் பிரதம விருந்தினராக கலந்து போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

குமுழமுனை சுப்பர் லீக் போட்டியில் ஐந்து அணிகள் பங்குபற்றியிருந்தன.

இதில் குருந்தூர் மற்றும் பண்டாரவன்னியன் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி மோதியிருந்தன.

இறுதிப் போட்டியில் குருந்தூர் அணி தண்ட உதை மூலம் 3.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது.

முதலாம், இரண்டாம் இடங் களைப் பெற்ற அணிக்களுக்கு பெறுமதியான வெற்றிக் கேடயங்களும், தொடர் ஆட்டநாயகனாக வி.திலக்சன், ஆட்ட நாயகனாக க.சுதாலதன், சிறந்த கோல் காப்பாளராக தெ.சதுர்சனனுக்கும் வெற்றிக் கேடயங்களும், அணிகளுக்கான உரிமையாளர் களுக்கு நினைவுச்சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர். (6-299)




## நான்காம் ஆண்டு
## நினைவலைகளுடன்

லயன் சீமாட்டி
**தனேந்திரன்**
**லீலாதேவி (பகவதி)**



தீவகத்திலே வேலணைப்
பெருங்குளம் முத்துமாரி
அம்பாள் அருளுடன் பிறந்து
யாழ்.நகரிலே மணம் முடித்து
உற்றார், உறவினர்,
நண்பர்கள் என
அனைவரையும்
அரவணைத்து வாழ்ந்த
மகள் காலனவன்
பிடியினிலே சிக்குண்டு
சென்றுவிட்டாள்.
அவள் உயிர்தான்
சென்றதே தவிர எங்கள்
உள்ளத்தில் என்றும்
வாழ்கிறாள்.

தோற்றம்
14.04.1957

மறைவு
14.10.2020

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(2274)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3241

Search for people, places and things

**தனுயா**




**கரன்**




**பவிஷ்**





**வதுசன்**




**தரணிகா**




**மதுனிகா**





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பணிக்கு வராவிட்டால் ஒரு இலட்சம் ரூபா அபராதம்

## தேர்தல்கள் ஆணையாளர்



**(கொழும்பு)**

**பாராளுமன்றத் தேர்தலுக்கான நியமனக் கடிதங்களைப் பெற்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தேர்தல் பணிக்கு வராவிட்டால் ஒரு இலட்சம் ரூபா அபராதம் அல்லது மூன்று வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப் படும் குற்றம் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

தபால் மூல வாக்குக ளுக்கு விண்ணப்பிக்காமை மற்றும் குறைபாடுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டமை என்பன தேர் தல் கடமைகளில் இருந்து விலக்கு பெறுவதற்கு ஒரு காரணமல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை தேர்தல் பணிக்கு வருவதற்கான நிய மனக் கடிதம் பெறும் அனை த்து அலுவலர்களும் உரிய தேர்தல் பணிக்கு சமூக மளிக்க வேண் டும் என்றும் தங்களது வழக்க மான பணியிடத்திற்குச் சென்று வருகைப் பதிவு சான் றிதழை நிறுவனத் தலை வரிடம் சமர்ப்பிக்க வேண் டும் என்றும் அவர் தெரி வித்தார்.

தேர்தல் கடமைக்கு சமூக மளிக்காத உத்தி யோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அரசியல மைப்பின் பிரகாரம் தேர் தல்கள் ஆணைக் குழு விற்கு ஒத்துழைக்க மறுப் பவர்கள் அல்லது தவறிய வர்கள் எனவும் தேர்தல் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (நி)

## ஐ.ம.ச வேட்பு மனு தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட் பாளர்களின் வேட்புமனுக் களை நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரே மதாச கையளித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜோன்ஸ்டனுக்கு பயணத் தடை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு வெளி நாடு செல்ல கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்றுத் தடை விதித்துள்ளது.

பதிவு செய்யப்படாத சொகுசு வாகனத்தை வைத் திருந்த குற்றச்சாட்டின் அடிப் படையில் இந்த பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் பயன்படுத்திய வாகனம், ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டு, இங்கி லாந்துக்கு அனுப்பி வைக் கப்பட்டு இந்த நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகவும் பதிவு செய்யப்படாத இலக்கத்தில் பயணித் ததாகவும் குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்த உண்மைகளை சுட்டிக் காட்டி கோட்டை நீதவான் தனுஜா லக்மாலி இந்த தடை உத்தரவை பிறப் பித்துள்ளார். (நி)

# இலங்கையின் பொருளாதார நிலைமை ஸ்திரமடைந்துள்ளது- உலக வங்கி

(வோஷிங்டன்)

இலங்கையின் பொருளா தார நிலைமை ஸ்திரமடைந் துள்ளது என உலக வங்கி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தற்போது நடைமுறையில் உள்ள சீர்தி ருத்தங்களைத் தொடர்வது அவசியம் என்றும் குறிப்பிட்டுள் ளது.2024 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக காணப்ப டும் என தெரிவித்துள்ள உலக வங்கி முன்னைய எதிர்வு கூறல்களை விட இது முன் னேற்றகரமான நிலையென வும் குறிப்பிட்டுள்ளது.


தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறையில் நான்கு காலாண்டுகளாக ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் முக்கியமான கட்டமைப்பு மற்றும் கொள்கை சீர்திருத்தங்களுமே இதற்கு காரணம்.

நுண்பொருளாதார ஸ்திர தன்மையை பேணுதல், கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்வது, வரு மானத்தை அதிகரித்து வறு மையை குறைப்பதற்காக கட்ட மைப்பு சீர்திருத்தங்களை தொடர்ந்து முன்னெடுப்பது ஆகி யவற்றிலேயே பொருளாதார மீட்சி தங்கியுள்ளது எனவும் உலக வங்கி தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# இராசிபலன்

11.10.2024
புரட்டாதி 25, வெள்ளிக்கிழமை
அட்டமி முற்பகல் 7.22 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 1.43 மணிவரை
சுபநேரம் -6.02-7.32 மணிவரை
இராகுகாலம் -10.32-12.02 மணிவரை
மகாநவமி விரதம்
சந்திராஷ்டமம்.
ரோகிணி,மிருகசீரிடம்.


வளவன்





செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர் கள், நினைத்த காரிய த்தை நினைத்த நேரத் தில் செய்து முடிப்பீர்கள், கனவுப் பலிதமுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.





பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டு வீர்கள், போசன சுகமுண்டு.





பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், வழி பாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.





தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பி னைக் காண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரியவர் களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.





இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், அலைச் சல்கள் குறைந்து ஆதா யம் கிடைக்கும், பய ணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெற லாம், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், இனிமையான நாள், போசன சுகமுண்டு.




பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலை பேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனு கூலமுண்டு.




சிறியவேலையொன்றுக் காக சற்று அலைய நேரிடலாம், இறைவழி பாட்டில் ஆர்வம் கூடும், சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.




வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், ஆன்மிக சிந்தனை மேலோங் கும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள்.




தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.





பணப்புழக்கம் அதி கரிக்கும் நாள், அரசு தொடர்பான காரியங் கள் அனுகூலம் தரும், வழிபாட்டுச் சிந்தனை மேலோ ங்கும் நாள், காரிய அனுகூல முண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞனைக் கேட்காதே அனுபவசாலியைக் கேள்.

# தமிழரசுக் கட்சி வேட்புமனுத் தாக்கல்



(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று தாக்கல் செய்தனர்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக அக்கட்சியின் சார்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். (6-33)

# மதுபானசாலைக்கான அனுமதியை ரத்து செய்யுங்கள்

## போராட்டத்திற்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் மதுபான சாலைகளை திறப்பதற்கான அனுமதியை உடன் இரத்துச் செய்யக்கோரி எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வலி- வடக்கு சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.

வலி -வடக்கு பிரதேசத்தில் தையிட்டி, தெல்லிப்பழை கிராமங்களில் புதிய மதுபானசாலைகளைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிகின்றோம்.

அதனை உடனடியாக நிறுத்துமாறு கோரி வலி- வடக்கு பிரதேச வாழ் மக்களிடையே கையெழுத்துப் போராட்டம் ஒன்றை நடத்தி தயாரிக்கப்படும் மகஜரை வலி- வடக்கு பிரதேச செயலாளரிடம் கையளிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது. (6)

# உளநல தினத்தை முன்னிட்டு மன்னாரில் விழிப்புணர்வு நடைபவனி

(மன்னார்)

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு "உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் இருக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்" எனும் தொனிப் பொருளில் மன்னார் மாவட்டத்தில் உளநலம் தொடர்பில் விழிப்புணர்வு நடைபவனி நேற்று இடம்பெற்றது.




மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய உளநல பிரிவு மற்றும் மன்னார் பொது வைத்தியசாலையின் ஏற்பாட்டில் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கை மன்னார் பொது வைத்தியசாலையில் இருந்து குறித்த ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஊர்வலம் மாவட்ட பொது வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பொலிஸ் நிலைய பிரதான வீதியை சென்றடைந்தது.

பின்னர் அங்கிருந்து பஸார் வீதியூடாக மாவட்ட செயலகம் சென்று அங்கிருந்து பொது விளையாட்டு மைதான வீதியை சென்றடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சென்று நிறைவடைந்தது.

குறித்த ஊர்வலத்தில் மன்னார் பொது வைத்திய சாலை பணிப்பாளர், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊழியர்கள், உளநல பிரிவு வைத்திய அதிகாரி, மற்றும் வைத்தியர்கள் ,பணியாளர்கள், தாதியர்கள், சுகாதார பணியாளர்கள், சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (6-285)

# விஜயதசமி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் விஜயதசமி பூசை வழிபாடுகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து நடனம், வீணை வயலின், மிருதங்கம், சங்கீதம் ஆகிய வகுப்புக்களுக்குப் புதிய மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என இளங்கலைஞர் மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (6)

# தமிழர் விடுதலைக் கூட்டணி மலையகத்திலும் போட்டி



(கண்டாவளை)

தமிழர் விடுதலைக் கூட்டணியானது வடக்கு கிழக்கிற்கு அப்பால் தெற்கிலும் போட்டியிடவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதியில் தமிழர் விடுதலை கூட்டணி உதய சூரியன் சின்னத்திலே நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட உள்ளது.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலிலும் சரியான பாராளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று நம்புகின்றேன் என தெரிவித்துள்ளார்.

(6-315)

# மாற்றுவலுவுடையோர்; வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

இயலாமை உடைய நபர்களுக்கான தொழில் ஆதரவை ஊக்கப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பான கலந்துரையாடல், யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலக அலுவலகத்தில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பினை பெற்றுக்கொடுத்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக யாழ் மாவட்டத்தில் இதுவரை தொழிலில் இணைப்புச் செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஜப்பான் JICA திட்ட இணைப்பாளர், சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர்கள், மாவட்ட மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-33)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவர்களுக்கு சுழிபுரம் தபாலக உத்தியோகத்தர்கள் பாடசாலைக்கு நேரடியாகச் சென்று அஞ்சல் அறிமுக அட்டைகளை வழங்கி வைத்தனர்.

(படம்- சிவசாந்தன்)



தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட நுணாவில் மேற்குப் பகுதியில் உள்ள பயனாளிக் குடும்பம் ஒன்றிற்கு நேற்றைய தினம் 52 ஆவது காலாட்படையின் சேனாதிபதி மேஜர் ஜெனரல் பத்திரனவிதான கலந்து கொண்டு பயனாளியிடம் வீட்டினைக் கையளித்திருந்தார். (படம்- சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.ச விலிருந்து சம்பிக்க விலகல்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர், ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருந்து விலகுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான உத்தியோகப்பூர்வ அறிவிப்பினை அவர் ஐக்கிய மக்கள் சக்திக்கு எழுத்து பூர்வமாக அறிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பில் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ஜனாதிபதி அநுரவை சந்தித்தார் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பஹீம் உல் அஸீஸ் ஹி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு பாகிஸ்தானின் அர்ப்பணிப்பையும் வலியுறுத்தியிருந்தார். (நி)

**லங்கா மஹால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974**

# ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ் போதனா வைத்தியசாலையில் 2022/2023, 2023/2024 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை (இரும்புக்கட்டில்கள், சில்லுக் கதிரைகள், மேசைகள், அலுமாரிகள்(steel), மரஅலுமாரிகள், மரக்கதிரைகள், கணணிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் மின் விசிறிகள், பழைய இரும்பு, அலுமினியம், சில்வர் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள் பழைய பிளாஸ்ரிக் பொருட்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் ஏனைய தளபாட உபகரணங்கள்) ஏல விற்பனை செய்தல் தலைவர், ஏல விற்பனை சபை 2022/2023, 2023/2024 ஆம் ஆண்டு பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்விமனு கோரப்படுகின்றது.

1. ஏலவிற்பனை தேசிய போட்டி பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் ஐப்பசி மாதம் 15 ஆம் திகதியில் இருந்து 23 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை இல 111, பிரதான வீதியில் உள்ள யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிட முடியும்.
3. பொருட்களை பெற விரும்புபவர்கள் வைத்தியசாலை காசாளரிடம் ரூபா 1000.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
4. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 10 000.00 இனை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனு பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 24.10.2024ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
5. அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்படும். அதி கூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
6. கேள்வி மனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவாராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏலவிற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்
8. மேலதிக விபரங்களை வைத்தியசாலை கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 021 222 3149, 021-221 2482 இனை அழைத்து பெற்றுக்கொள்ளமுடியும்.

**பணிப்பாளர் (தலைவர்),**
**ஏலவிற்பனை சபை**
**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்**

(சி-1368)

# விற்பனை முகவரை தெரிவு செய்தல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் (வரணி வடிசாலை) உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாரய வகைகள் **(30%, 33.5%, 34% - 750 ml, 375 ml, 180 ml)** மற்றும் பருவ காலங்களில் போத்தலில் அடைக்கப்படும் கள் போன்றவற்றை அனுமதி பெற்ற விற்பனை நிலையங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதற்கான முகவரை தெரிவு செய்யவுள்ளோம். இத்தெரிவுகள் யாவும் நெறியாளர் குழுவில் ஆராயப்பட்டு தெரிவு செய்யப்படும். விண்ணப்பங்களை வழங்க விரும்புவோர் **30.10.2024** ஆம் திகதிக்கு முன்னதாக **தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, வரணி** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பம் வழங்க முடியும். விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருடன் நிபந்தனைகளை உள்ளடக்கி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு **(வங்கி உத்தரவாதம் பெறப்பட்டு)** செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

**தலைவர்,**
**க.இராசதுரை,**
**021 205 0854.**

(சி-1372)

# பானை முறையிலான வடிகலன் பொறித்தொகுதியை திருத்தம் செய்வதற்கான மதிப்பீட்டறிக்கை பெற்றுக்கொள்ளல்

வரணி வடிசாலையில் பொருத்தப்பட்டு தற்போதும் செயற்படுத்திக் கொண்டிருக்கும் பானை முறையிலான வடிகலன் பொறித்தொகுதியை 2025 ஆம் ஆண்டு முழுமையாக தொழிற்படுத்த கூடியவாறு திருத்தம் செய்வதற்கு முன்னதாக செய்ய வேண்டிய, மாற்றவேண்டிய பழுதுகளை பார்வையிட்டு மதிபபீட்டறிக்கை பெற்றுக்கொள்வதற்காக இத்துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் மூலம் அலுவலக வேலைநாட்களில் சமூகம் கொடுத்து பொறித்தொகுதியை பார்வையிட்டு 01.11.2024 ஆம் திகதிக்கு முன்னதாக **தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, வரணி** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் அறிக்கையினை வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**(மேலதிக தொடர்புகளுக்கு 021 205 0854 அலுவலக தொலைபேசி இலக்கம்)**

**தலைவர்,**
**க.இராசதுரை.**

(சி-1371)

# யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## க.பொ.த உயர்தரத்திற்கான அனுமதி வழங்கல் - 2024

நீங்கள் 2023 (2024) மற்றும் 2024 ஆம் ஆண்டு க.பொ.த (சா/தர) பரீட்சைக்கு தோற்றியிருப்பின் தாங்கள் க.பொ.த உயர்தரக் கல்வியினை தொடருவதற்கு பின்வரும் துறைகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

- கணிதப்பிரிவு
- விஞ்ஞானப்பிரிவு
- கலைப்பிரிவு
- வர்த்தகப்பிரிவு
- தொழில்நுட்பப்பிரிவு
- தொழிற்பிரிவு

அதற்கான விண்ணப்பப்படிவம் எமது கல்லூரியின் கூட்டுறவுச் சங்கத்தில் பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2024.10.21 இற்கு முன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்

**அதிபர்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1370)

# அகமிக மகிழ்ந்து வாழ்த்துகிறோம்

திரு. **பத்மராசா பத்மநிருபன்**
(தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)



09.09.2024 அன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி திரு.அ.அ.ஆனந்தராஜா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட எங்கள் அன்புக்குரிய திரு.பத்மராசா பத்மநிருபனை வாழ்த்துவதில் பேருவகை அடைகிறோம். மக்கள் சேவையே மகத்தானது என்றெண்ணி சேவையாற்ற வெல்வில் முருகனை வேண்டி நிற்கின்றோம் வாழ்க வளமுடன்.

Best Wishes

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

(2268)

திருநாமம் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அணு ஆயுத சோதனை நடத்திய ஈரான்

### கசிந்த தகவலால் திட்டத்தை மாற்றிய நெதன்யாகு

(இஸ்ரேல்)

ஈரான் அணு ஆயுத சோதனை நடத்தியுள்ளதாக தகவல்கள் கசிந்த நிலையில், இஸ்ரேல் தனது தாக்குதல் திட்டத்தை முற்றாக மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், ஈரான் அணு ஆயுத சோதனை நடத்தியதாக வெளியான தகவல்களானது சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் தற்போது பெரும் விவாதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஐந்தாம் திகதி ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளிலும் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

குறித்த நிலநடுக்கமானது, ஈரானின் செம்னான் மாகாணத்தில் உள்ள அராடன் என்ற இடத்தில் 10 கிமீ ஆழத்தில் மையம் கொண்டிருந்ததுடன் மையப்பகுதியிலிருந்து சுமார் 110 கிமீ தொலைவில் தெஹ்ரான் வரை இந்த நடுக்கம் உணரப்பட்டதாகஅமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.



அதனைத் தொடர்ந்து, முதல் நிலநடுக்கத்திற்கு சில நிமிடங்களுக்குப் பிறகு, நள்ளிரவில் இஸ்ரேலில் இரண்டாவது நிலநடுக்கம் உணரப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது.

இந்த நிலையில், குறித்த சம்பவமானது இரு நாடுகளுக்கிடையில் நடந்து வரும் மோதல் நிலைக்கு மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க சிஐஏ அமைப்பின் தலைவர் வில்லியம் பர்ன்ஸ், "ஈரானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அணு ஆயுத சோதனை என்று சந்தேகிக்கிறோம். அவர்கள் அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்தில் தீவிரமாக இருக்கிறார்கள் என்றே நாங்கள் கருதுகிறோம்" என தெரிவித்துள்ளார். (நி)

## பாராளுமன்றத்தை கலைத்தார் ஜப்பான் பிரதமர் இஷிபா



(டோக்கியோ)

ஜப்பான் பிரதமராகப் பதவி வகித்து வந்த புமியோ கிஷிடா மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதனால் அவர் சமீபத்தில் இராஜினாமா செய்தார். புமியோ இஷிபா 2021இல் பிரதமராகப் பொறுப்பேற்று, 3 ஆண்டுகளே பதவியில் இருந்தார்.

இதையடுத்து புதிய பிரதமரை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் ஆளுங்கட்சிக்கு ஏற்பட்டது. பிரதமர் பதவிக்கு, அதாவது கட்சித் தலைவர் பதவிக்கு 9 பேர் போட்டியிட்டனர். இதற்கான வாக்கெடுப்பு கடந்த 1 ஆம் திகதி நடந்தது. இதில் ஷிகெரு இஷிபா வெற்றி பெற்றுப் பிரதமராக பதவியேற்றார்.

அப்போது விரைவில் பாராளுமன்றத்தை கலைத்து விட்டு முன்கூட்டியே தேர்தலை நடத்த முடிவு செய்தார். வரும் 27 ஆம் திகதி தேர்தலை நடத்த உள்ளதாகக் கூறியிருந்தார்.

இந்நிலையில், ஜப்பான் பாராளுமன்றத்தை (கீழ் சபை) கலைத்து பிரதமர் ஷிகெரு இஷிபா திட்டமிட்டபடி வரும் 27 ஆம் திகதி தேர்தலை நடத்தத் தயாராகி வருகிறார்.

தற்போதைய ஆட்சிக்கு மக்களின் ஆதரவு மற்றும் அங்கீகாரத்தை பெற நாங்கள் நேர்மையாக செயற்படுவோம் என இஷிபா, தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் தேர்தல் முடிந்து புதிய அரசு அமையும் வரை பதவியில் இஷிபாவும், அவரது அமைச்சரவையும் பதவியில் நீடிப்பார்கள்.

அதேசமயம், அவசர அவசரமாக தேர்தலை நடத்தும் பிரதமரின் முடிவை எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சித்து வருகின்றனர். (நி)

## மில்டன் சூறாவளி கரையைக் கடந்தது புளோரிடா மக்கள் கடுமையாக பாதிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடாவைத் தாக்கிய மில்டன் சூறாவளி காரணமாக இரண்டு மில்லியன் மக்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள் ளதாகவும் சொத்துக்களிற்கு பெரும்சேதம் ஏற்பட் டுள்ளதாகவும் அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



அமெரிக்க ஜனாதிபதியினால் இந்த நூற்றாண்டின் சூறாவளி என வர்ணிக்கப்பட்ட மில்டன் சூறாவளி புளோரிடாவின் சரசொட்டா பகுதியைத் தாக்கியுள்ளது என அமெரிக்காவின் சூறாவளி கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் மில்டன் சூறாவளி நேற்று முன்தினம் புதன் கிழமை 5 ஆம் நிலையில் இருந்து 3 ஆம் நிலை புயலாக வலுவிழந்தது. இருப்பினும் அது புளோரிடாவை நெருங்கிய போது மணிக்கு 195 கி.மீ வேகத்தில் காற்று வீசியது என்று அமெரிக்க புயல் எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

சூறாவளி காரணமாக புளோரிடா மாகாணத்தில் 20 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் மின்சாரம் இல்லாமல் இருளில் மூழ்கியுள்ளன. சரசோடா கவுண்டி அதன் அண்டைப் பகுதியில் இருக்கும் மனாட கவுண்ட் பகுதிகளில் தான் அதிக அளவிலான மின் தடை ஏற்பட்டுள்ளது. புளோ



ரிடாவின் கிழக்கு கடற்கரை பகுதியில் உள்ள புனித லூசி கவுன்டியில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ள தாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை துல்லியமாகத் தெரியவில்லை என்றும் அதிகாரிகள்

## எல்லை

## புதை

## கொரிய



வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே நீடித்துவரும் எல்லைப் பிரச்சினையில் வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது.

உலக நாடுகள் எதிர்ப்பை மீறியும் வடகொரியா இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் அந்நாட்டுக்கு பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

என்றாலும் அதிலிருந்து பின்வாங்காமல் தொடர்ந்து ஏவுகணை சோதனையில் ஈடுபட்டு வருகிறது அந்நாடு. தற்போது, அணு ஆயுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லைப் பகுதியில் கண்ணிவெடிகளை தக்கும் வடகொரியா!

## ப தீபகற்பத்தில் அதிகரிக்கும் பதற்றம்



(பியாங்யாங்)

**தென்கொரியாவுடனான தொடர்புகளை நிரந்தரமாகத் துண்டிக்க எல்லைப் பகுதியில் கண்ணிவெடிகளைப் புதைப்பதாக வடகொரியா அரசு தெரிவித்துள்ளது.**

மூலப்பொருளான யுரேனியம் தயாரிக்கும் பணியிலும் வட கொரியா ஈடுபட்டு வருகிறது.

வடகொரியா இந்த அளவிற்கு யுரேனியம் தயாரிக்கும் பணியிலும் ஏவுகணை சோதனைகளிலும் ஈடுபடுவதற்கு மிக முக்கியமான காரணமே தென்கொரிய நாடானது அமெரிக்காவுடன் இணைந்து போர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதுதான்.

மேலும் வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு எதிராக தென்கொரியாவின் திறன்களுடன் அமெரிக்காவின் அணு ஆயுதங்களை இணைக்கும் திட்டத்தில் இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்காவின் விமானம் தாங்கிக் கப்பல்கள், நீண்ட தூரம் சென்று குண்டுவீசும் விமானங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளிட்டவை தென்கொரியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு வடகொரியா கண்டனம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து வடகொரிய




ஜனாதிபதி கிம் ஜாங் உன் தென்கொரியா மற்றும் அமெரிக்காவுக்கு எதிராக அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதையடுத்து வட கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.


இந்த நிலையில் தென் கொரியாவுடனான எல்லைப் பகுதிகளை நிரந்தரமாக துண்டிக்க உள்ளதாக வட கொரிய அரசு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன்படி வடகொரியாவில் இருந்து தென் கொரியா செல்லும் சாலை, ரயில்வே வழித்தடங்களை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் எல்லைப் பகுதிகளில் கண்ணி வெடிகளைப் புதைத்து, தடுப்புகள் ஏற்படுத்தி, கூடுதல் இராணுவ வீரர்களை நிறுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பாதுகாக்கவே இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை தாண்டிய பயணம் பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



தெரிவித்துள்ளனர். முன்னதாக இரண்டு வாரங்களுக்கு முன்பு ஹெலேன் சூறாவளி தாக்கப்பட்ட புளோரிடாவில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐ.நாவில் இணைவதற்கான வாய்ப்பை இழந்த சவூதி

(கட்டார்)

சவுதி அரேபியா மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக வதை குழுக்கள் புகார் அளிக்க ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுவில் இணைவதற்கான வாய்ப்பை சவூதி அரேபியா இழந்துள்ளது.

இந்த வருடம் ஆசிய-பசுபிக் குழுவில் ஐந்து இடங்களுக்கு ஆறு நாடுகள் போட்டியிட்டன. இதில் தாய்லாந்து 177 வாக்குகள் பெற்றது. சைப்ரஸ், கட்டார் தலா 167 வாக்குகள் பெற்றன. தென் கொரியா 161 வாக்குகள் பெற்றது. மார்ஷல் தீவு 124 வாக்குகள் பெற்றது. சவுதி அரேபியா 117 வாக்குகள் பெற்றது.

இந்த வாக்கெடுப்பிற்கு முன்னதாக, ஐ.நா.வுக்கான மனித உரிமை கண்காணிப்பு இயக்குனர் லூயிஸ் சார்போன்னோ, மனித உரிமை கவுன்சிலில் பணியாற்ற சவுதி அரேபியா தகுதியற்றது எனத் தெரிவித்தார்.

2022 மற்றும் 2023 இல் ஏமன்-சவுதி எல்லையில் எத்தியோப்பியாவில் இருந்து புலம் பெயர்ந்தவர்களை சவுதிஎல்லை பாதுகாப்புப்படை வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். இதில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். 2018 இல் சவுதி அரேபிய பத்திரிகையாளர் இஸ்தான்புல்லில் கொலை செய்யப்பட்டதில் அரசின் செயற்பாடு ஆகியவற்றை சுட்டிக்காட்டினார்.

மேலும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் அல்லது அதுபோன்ற அட்டூழியங்களைச் செய்து அதற்குப் பொறுப்பானவர்கள் தண்டனையிலிருந்து விலக்கப்படுவதை உறுதி செய்யும் அரசாங்கங்கள், ஐ.நாவின் மனித உரிமைகள் அமைப்பின் உயர்மட்டக் குழுவில் இடம் பெறக் கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபாவின் பெறுமதியில் சற்று வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக அமெரிக்க டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதி முறையே 288.66 ரூபாவாகவும், 297.66 ரூபாவாகவும் உள்ளது. நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதி முறையே 288.58 ரூபாவாகவும் 297.62 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், மத்திய கிழக்கு உட்பட ஏனைய பிரதான நாட்டு நாணயங்களுக்கு நிகராக ரூபாவின் பெறுமதி நேற்று உயர்ந்துள்ளது. (நி)

# பங்களாதேஷ் பிரஜைகள் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி சேர்பியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற எட்டு பங்களாதேஷ் பிரஜைகள் குடிவரவுத் திணைக்களத்தின் எல்லை அமுலாக்கப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 8 பங்களாதேஷ் பிரஜைகளில் ஒருவர் போலிக்கடவுச்சீட்டை பயன்படுத்தி கட்டாரிலிருந்து டோஹா வழியாக சேர்பியாவுக்குத் தப்பிச் செல்வதற்காக நேற்றுமுன்தினம் இரவு 08.20 மணியளவில் கட்டு நாயக்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடம் இருந்த ஆவணங்கள் போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணையில் போலிக் கடவுச்சீட்டைத் தயாரிக்க சந்தேக நபருக்கு உதவி செய்ததாக கூறப்படும் மற்றுமொரு பங்களாதேஷ் பிரஜை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் சேர்பியாவுக்கு தப்பிச் செல்வதற்காக மேலும் 6 பங்களாதேஷ் பிரஜைகள் காத்திருப்பதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து இந்த பங்களாதேஷ் பிரஜைகளை கைது செய்து, அவர்களை குடிவரவுத் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 160 | 80-120 | 100 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 200 | 250-300 | 350 |
| தக்காளி | 200 | 250 | 400 | 230 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 240 | 200 | 150-200 | 200 |
| கோவா | 180 | 250 | 200 | 220 | 250 |
| கரட் | 160 | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 70 | 120 | 100 | 150 | 250 |
| வாழைக்காய் | 150 | 160 | 200 | 150-170 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 200-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 200 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 500-600 | 450 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 100-130 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 200 | 150 | 250 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 250-350 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 140 | 150 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 500 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 300 | 200-300 | 500 |
| போஞ்சி | 350 | 500 | 450 | 320 | 600 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 180 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 450 | 300-350 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 130 | 80-150 | 100-150 |
| இராசவள்ளி | -- | 450 | 1500 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 130 | 450 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 120 | 80 | 100 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 160 |

# இன்று ஒரு தகவல் 238



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## பாதுகை

சேர் புராண விடயங்களைப் பற்றி நாம் பேசிக்கொண்டு இருக்கிறபோது விஞ்ஞானக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு அதைக் கேட்க முயற்சி செய்வது தப்பு, அதனால் அப்படி யாராவது போட்டுக்கொண்டு இருந்தால் அதை கழற்றி வைத்து விட்டு ஆன்மிகக் கண்ணாடி எடுத்து மாட்டிக்கொண்டு அதற்கு பின்னர் இதை கேளுங்கள். அப்பொழுது தான் குறுக்குக் கேள்விகள் எல்லாம் கேட்காமல் நீங்கள் இதைக்கேட்க முடியும். நானும் சிறிது துணிச்சலாக உங்களிடம் பேசமுடியும்.

வைகுண்டத்திலே ஒரு நாள் திருமால் வழக்கத்திற்கு மாறாக ஒருகாரியம் செய்தார். தன்னுடைய பாதுகையை பள்ளியறைக்குள்ளே விட்டுவிட்டு பாம்பணையில் படுத்தார். உடனே அவருடைய திருமுடிக்குக் கோபம் வந்து விட்டது. முடி, பாதுகை எல்லாம் தவம் செய்து அந்தப்பதவியை அடைந்திருந்ததாம்.

திருமுடி பாதுகையை பார்த்து சத்தமிட ஆரம்பித்தது. ஏ! பாதுகையே உனக்கு அறிவு இருக்கிறதா. கண்ட கண்ட இடத்தில் எல்லாம் மிதிக்கின்ற நீ இப்படி படுக்கை அறைக்குள் வரலாமா? போ வெளியே! என்று கத்தியது. பாதுகை இதற்கு பணிவாகப் பதில் சொல்லியது. திருமுடியே நீ சொல்வது சரி தான். இருந்தாலும் நானாக இந்த இடத்திற்கு வரவில்லை. பகவானுடைய திருவடிதான் என்னை இங்கு கொண்டு வந்து உள்ளே விட்டுவிட்டது. இப்படி இருக்கும் போது வீணாக என்னை நீ கோபிக்கின்றாய்.

"எய்தவன் ஒருவன் இருக்கும் போது அம்பை நோகலாமா? இது சரியா" என்று கேட்டது. இதைக் கேட்டதும் திருமுடிக்கு மேலும் கோபம் வந்துவிட்டது.

பாதுகையே "நீ மிகவும் அதிகமாகப் பேசுகிறாய்! நீ மிகவும் இழிவான பொருள்! நீ இவ்வளவு தூரம் பேசக்கூடாது".

இங்கு உள்ளே இருப்பதற்கு உனக்குத் தகுதி கிடையாது. நான் அப்படி என்றால் பெருமாளுடைய தலைக்கு மேல் இருக்கக் கூடிய தகுதி உடையவன்.

என்னோடு சரிக்குச் சரியாக பேசுவதற்கு கூட உனக்குத் தகுதி கிடையாது. அதனால் இங்கே இருக்காதே. சீக்கிரம் போய் தொலைந்து விடு என்கிறது.

"முடியே எதற்காக இப்படி வீணாகப் பெருமை அடைந்து கொள்கிறாய். எனக்கு என்று தனியாக ஒரு செயலும் கிடையாது. நான் இப்பவும் ஐயன் திருவடியை ஒட்டிக்கொண்டு இருக்கிறவன். அந்தப் பாதத்தை நம்பியவர்களுக்கு நல்லது நடக்கிறது.

அடியவர்கள் எல்லோரும் அடியைத்தான் விரும்புகிறார்கள்.

"அடி சேராய்" என்று தானே பாடுகிறார்கள். அதனால் என்னை இப்படிப் பழித்துப் பேசாதே என்றது பாதுகை. இவ்வளவு நேரமும் இந்த விவகாரத்தை பார்த்துக் கொண்டு இருந்த சங்கும் சக்கரமும். திருமுடிப் பக்கம் சேர்ந்து கொண்டு பாதுகையை விரட்ட ஆரம்பித்து விட்டது.

"எப்பவும் உயரத்தில் இருப்பவர்களுக்குத் தான் சப்போர்ட் அதிகமாக இருக்கும்".

உனக்கு என்ன இவ்வளவு திமிர் .

பேசாமல் வாயை மூடிக்கொண்டு வெளியே போறியா? இல்லையா? என்று அது இரண்டும் கத்துகிறது. பாதுகை நிலமை பரிதாபமாக இருந்தது.

உடனே நாராயணனைப் பார்த்து கருணைக்கடலே நீங்களே இப்படி என்னை உள்ளே கொண்டு வந்து விட்டுவிட்டு அதன் பின்பு அவர்களை விட்டு இப்படிப் பேசச் சொல்வது சரியா? என்று முறையிட்டது.

திருமால் உடனே பாதுகையை நீ கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி விட்டு முடியை பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார். "முடியே நீ தற்பெருமையாக பேசி இந்தப் பாதுகையை அவமானப்படுத்தி விட்டாய்". இதனால் அடுத்து வரும் இராம அவதாரத்தில் 14 வருடங்கள் இந்தப் பாதுகையின் மேலே இருக்கக் கடவது.

"சங்கே சக்கரமே, நீங்கள் இரண்டு பேரும் என் கண்முன்னால் பாதுகையைப் பழித்து பேசி விட்டீர்கள். அதனால் இராம அவதாரத்தில் நீங்கள் இரண்டு பேரும் சத்துருக்கனாகவும் பரதனாகவும் பிறந்து இந்தப் பாதுகையை 14 வருடங்கள் வழிபடக் கடவது. என்று சொல்லி விட்டார். அதனாலே தான் 14 வருடம் பாதுகைக்கு முடிசூட்டி பரதர் விரதம் இருந்து பாதுகையைப் பூசித்து வந்தார்.

"கீழோராயினும் தாழவுரை" என்பது இதன் விளக்கம். "சிறியவர்கள் தானே என்று நினைத்து யாரையும் இகழக்கூடாது" என்பது தான் நாம் இதில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டியது.

பாதுகையைப் பற்றி நான் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். அப்படிச் சொல்லி முடிப்பதற்கு உள்ளே இதோ என் எதிரில் ஒருவர் மிகவும் பக்குவமாக வந்து கேட்டுக் கொண்டு இருக்கிறார்.

"நல்ல விடயங்களைக் கேட்பதற்கு நல்லவர்கள் எப்பவும் தயாராகவே இருப்பார்கள்" என்று நாம் நினைப்பதற்கு உள்ளே இவர் பேச ஆரம்பித்தார். அவர் என்னை பார்த்து நீங்கள் சொல்வது சரி தான் இருந்தாலும் நான் உங்களைத் தேடி வந்தது வேறு விடயம். அதுவும் பாதுகை சம்பந்தப்பட்ட விடயம் தான்.

நேற்றைக்கு நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டு திரும்பும் போது உங்கள் பழைய செருப்பை அங்கேயே விட்டுவிட்டு என்னுடைய புதிய செருப்பைப் போட்டுக்கொண்டு வந்து விட்டீர்கள். உங்களுடையதை மிகவும் பக்தி பூர்வமாக அங்கே இருந்து சுமந்து கொண்டு வந்திருக்கிறேன். ஏன் என்றால் காலிலே மாட்டமுடியவில்லை காதறுந்து போய் விட்டது சார்.

நான் பரதன் இல்லை ஒரு பாமரன். தயவு செய்து என்னுடையதை என்னனிடம் கொடுத்து விடுங்கள் என்றார். நீங்க என்ன சொல்கிறீர்கள் கொடுத்து விடலாமா? வேண்டாமா? இவ்வளவு தூரம் பகிரங்கமாக தெரிந்து போனதற்கு பின்னர் அதைத் திருப்பிக் கொடுப்பது தான் நல்லது என்ன சொல்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை விவசாயிகளை மாற்றாதீர்கள்!

## மன்னாரில் விவசாயிகள் போராட்டம்

**(மன்னார்)**

**மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இலுப்பைக்கடவை பகுதியிலுள்ள சோழமண்டல குளம் காணியை விவசாயிகளுக்கு வழங்கக்கோரி நேற்று போராட்டமொன்று இடம்பெற்றது.**



மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இலுப்பைக்கடவை பகுதியிலுள்ள சோழமண்டல குளம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணியில் கடந்த 30 ஆண்டுகளாக நூறு ஏழை விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இவர்களுக்கான காணி ஆவணத்தை வழங்காமல் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு காணி வழங்கியுள்ளமையைக் கண்டித்து குறித்த போராட்டம் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலுப்பைக் கடவையில் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தேர்தல் திணைக்களமே ஏழைகளின் எதிரியா?, அரச அதிகாரிகளே காணி மாபியாக்களின் கூட்டாளிகளா?, ஏழை விவசாயிகளை ஏமாற்றாதீர்கள். எமது நிலம் எமக்கு வேண்டும், வெளிநாட்டவர்களுக்கும், கொழும்பில் உள்ளவர்களுக்கும் எமது காணியை வழங்கலாமா? உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் முன்னெடுக்கப்பட்ட இடத்திற்கு சென்ற மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு எழுதிய கடிதத்தை அரச அதிபரிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-285)

# ஐ.த.தே கூட்டமைப்பு வேட்பு மனுத்தாக்கல்



(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவினை ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேற்றையதினம் தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது சங்குச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்றுமதியம் வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தது.

வன்னி மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பாக செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், செந்தில்நாதன் மயூரன், கந்தையா சிவனேசன், க.விஜிந்தன், க.துளசி, யசோதினி, மூர்த்தி, அ.றொயன், ஆகியோர் வேட்பாளர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (6-299)



கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலய மாணவர்கள் வலய மட்ட விவசாய விநாடி வினாப் போட்டியில் வெற்றி பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
(படம்: கிருஷ்ணகுமார்)

# தேசியமட்ட கைப்பந்து போட்டி

## பரந்தன் இந்து ம.வி இரண்டாமிடம்



(முறிகண்டி)

தேசிய மட்ட கைப்பந்துப் போட்டியில் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயம் 2 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளது. அம்பாந்தோட்டை ராஜபக்ச மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் குறித்த இறுதிப்போட்டி இடம்பெற்றது.

இதில் 20 வயதுப் பிரிவிற்கான பெண்கள் அணியில் கலவல சென்.அன்ரனிஸ் கொலிஜ் உடன் விளையாடிய பரந்தன் இந்து மகா வித்தியாலயம் 2ஆம் இடத்தினை தனதாக்கியது.

குறித்த வீரர்களை வரவேற்று மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை பரந்தன் சந்தியில் ஆரம்பமாகி வீராங்கனைகளிற்கு வரவேற்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலை வரை பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் வீராங்கனைகள் அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (6-100-316)

# வன்னி மாவட்டத்தில் பெரமுன வேட்பு மனுத்தாக்கல்

(குருமன்காடு)

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவினைப் பொதுஜன பெரமுன நேற்றுத் தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றது. இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்று வேட்புமனுவினைத் தாக் கல் செய்தனர்.

இதன்போது வன்னியின் முதன்மை வேட்பாளர் துசாரி முத்துமாலி மற்றும் ஏனைய வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (6-250)





வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நேற்று கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது. இதன்போது கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.
(படம்: தேவானந்தன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 603





இளவரசி! இவையெல்லாம் உண்மையா இல்லையா? அல்லது நாற்பது நாளைக்கு முன்பு முதன்முதலாகத் தங்களை நான் பார்த்தது தான் உண்மையா? என்றான் வந்தியத்தேவன். அப்படியும் அவன் பேசி முடித்து விட்டதாகக் காணப்படவில்லை.

"தேவி! இன்னொரு ஞாபகம் வருகிறது. ஒரு சமயம் வெள்ளி ஓடத்தில் நாம் ஏறி, தங்கப் பிடிப்போட்ட தந்தத் துடுப்புகளைப் பிடித்துக்கொண்டு வானக் கடலில் வெண்ணிலா அலைகளைத் தள்ளிக்கொண்டு, பிரயாணம் செய்தோம் என்று ஆரம்பித்தான்.

"ஐயையோ! இந்த நிமித்தக்காரனுக்கு நன்றாய்ப் பைத்தியம் பிடித்துவிட்டது போலிருக்கிறது. படகைத் திருப்பிக் கரைக்குக் கொண்டு போக வேண்டியதுதான்!" என்றாள் இளவரசி.

இல்லை, தேவி, இல்லை! சற்று முன்னால் இந்த ஓடைக் கரைக்கு வந்துசேரும் வரையில் என் அறிவு தெளிவாகத்தானிருந்தது. இல்லாவிட்டால் இந்தப் பழையாறை நகருக்குள் பிரவேசிப்பதற்கு நான் உபாயம் கண்டுபிடித்திருக்க முடியுமா? மதுராந்தகத் தேவரிடம் நிமித்தக்காரன் என்று சொல்லி அதை நம்பும்படியும் செய்து அரண்மனைக்கு வந்திருக்க முடியுமா? வைத்தியர் மகனிடமிருந்துதான் அவ்வளவு எளிதில் தப்பி வந்திருக்க முடியுமா? இந்தப் படகில் ஏறித் தங்கள் திருமுகத்தைப் பார்த்தவுடனேதான் மது உண்டவனைப்போல் மதிமயங்கிப் போய்விட்டேன்! என்று சொன்னான் வந்தியத்தேவன்.

"ஐயா, அப்படியானால் என் முகத்தைத் தாங்கள் பார்க்க வேண்டாம். இந்த ஓடையின் தெளிந்த நீரைப் பாரும். நீல வானத்தைப் பாரும், ஓடைக்கரையில் வானளாவி வளர்ந்திருக்கும் மரங்களைப் பாரும், அரண்மனை மாடங்களைப் பாரும், பளிங்குக்கல் படித்துறைகளைப் பாரும், இந்த ஓடையில் பூத்திருக்கும் ஆம்பல் மலர்களையும், செங்கழுநீர்ப் பூக்களையும் பாரும். அல்லது இந்தச் செவிட்டு ஓடக்காரனின் முகத்தையாவது சற்றே பாரும். அவ்விதம் பார்த்துக்கொண்டே தாங்கள் போன காரியம் என்ன ஆயிற்று? காயா, பழமா என்று சொல்லும். இளவரசரை அழைத்து வந்தீரா, சௌக்கியமா இருக்கிறாரா. எங்கே விட்டு வந்தீர், யாரிடம் விட்டு வந்தீர் என்று முதலில் தெரியப்படுத்தும், பிறகு, இங்கிருந்து புறப்பட்டு முதல் நடந்தவை எல்லாவற்றையும் சொல்லும்! என்று இளவரசி கூறினாள்.

அதற்கு வந்தியத்தேவன், "தேவி! தங்களிடம் ஒப்புக்கொண்டு போன காரியத்தை வெற்றிகரமாக முடித்திராவிட்டால் தங்களிடம் திரும்பி வந்து என் முகத்தைக் காட்டியிருப்பேனா? இளவரசரை இலங்கையிலிருந்து அழைத்துக் கொண்டு வந்தேன்.

அதற்கேற்பட்ட ஆயிரம் இடையூறுகளையும் வெற்றி கொண்டு அழைத்து வந்தேன். இளவரசர் சுகமாயிருக்கிறார் என்று நான் சொல்லமுடியாது. நான் அவரை விட்டுப் பிரியும் போது அவருக்குக் கடுமையான சுரம். ஆனால் பத்திரமான கைகளில் அவரை ஒப்படைத்து வந்திருக்கிறேன். ஓடக்காரப் பெண் பூங்குழலியிடமும் பூக்காரச் சிறுவன் சேந்தன் அமுதனிடமும் இளவரசரை விட்டு வந்திருக்கிறேன். அவர்கள் இளவரசரைக் காப்பாற்றுவதற்காக நூறாயிரம் தடவை வேண்டுமென்றாலும் தங்கள் உயிரைக் கொடுக்கக்கூடியவர்கள்!" என்றான்.

அச்சமயம் தூரத்தில் பயங்கரமான, குழப்பமான, அநேகாயிரம் குரல்களின் ஒருமித்த ஓலம்போன்ற சத்தம் எழுந்தது. சத்தம் வந்த திசையை அரசிளங்குமரியும், வந்தியத்தேவனும் பயத்தோடும் கவலையோடும் நோக்கினார்கள்.

"அது என்ன ஆரவாரம்? கோபங்கொண்ட ஜனத்திரளின் கூக்குரல் போல் அல்லவா இருக்கிறது?" ஆம் அப்படித்தான் தோன்றுகிறது!" என்றான் வந்தியத் தேவன்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# ஜனநாயக மாண்பு

வன விலங்குகள் தங்களுக்கான தலைவனைத் தேர்ந்தெடுக்க பேரவைத் தேர்தல் நடத்துவதில் எப்போதுமே போட்டியிருக்காது. இந்தமுறை போட்டி வந்துவிட்டது.

சிங்கத்தை எதிர்த்து நரி போட்டியிடப் போவதாகக் கூறியது.

சிங்கத்திற்கு பயம் வந்து விட்டது. நரி ஏதாவது தந்திரம் செய்யும். நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என்றது. விதி, மேலும் சில விலங்குகள் தாங்களும் போட்டியிடப் போவதாகக் கூறின. பேரவை உறுப்பினர்கள் பத்துப்பேர்தான் இருக்கலாம் என்பது விதி. ஆகவே தேர்தல் நடத்தவேண்டி வந்தது. ரகசிய ஓட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பத்துப் பேர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் தலைவரை தேர்வு செய்ய வேண்டும். சிங்கத்துக்கு எதிராக நரி தலைவர் போட்டியிட்டது. சிங்கம் கூறியது, இப்பொழுது தலைவருக்கு ஒட்டு போடுபவர்கள் ஒட்டில் தங்கள் கையெழுத்துக்களை வையுங்கள்.

நரி ஆட்சேபித்தது. இதெப்படி ஜனநாயகமாக இருக்க முடியும்? கையெழுத்திட்டால் யாருக்கு யார் ஓட்டளித்தது என்று தெரிந்து விடாதா? என்றது.

சிங்கம் கூறியது இது தான் நம் அமைப்புக்கென்ற விதி. ஜனநாயகமும் சாகக்கூடாது பரம்பரைத் தலைமையும் போய்விடக்கூடாது. அப்படியென்றால் சிங்கப் பரம்பரை தான் ஆளவேண்டுமா? அப்படியில்லை தகுதி உள்ளவைகளே பதவி ஏற்க முடியும்.

## ஆத்தி சூடி



அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்

ரா.அத்விக்சேனோன்
பிள்ளைக்கனியமுது
முள்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்பவரே தன்னை முழுமையான சக்திசாலியாய் மாற்றிக் கொள்கிறார். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுத் தேர்தல் பிராக்கில் பொது வேலையை மறக்காதீர்கள்

ஜனாதிபதித் தேர்தல் பிராக்கு சிறிது காலத்தைச் சமாளித்தது. தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகிய போது, சில நாட்கள் அதுவே பேசுபடுபொருளாயின.

இதையும் கடந்து, ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்ற அநுர குமார திஸாநாயக்கவின் அதிரடி அறிவிப்புகள் அவரை நோக்கிய கவனயீர்ப்பை மேலும் வலுப்படுத்தியது.

அமைச்சர்கள் வாகனங்களை ஒப்படைக்க வேண்டும் என்பது முதல், முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியத்தை நிறுத்தம் செய்வது, மத்திய வங்கி ஆளுநர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில்லை என்பன உள்ளிட்ட அதிரடி அறிவிப்புகள் இன்னமும் பொதுமக்களின் உரையாடல்களில் ஊசலாடுவதைக் காண முடிகிறது.

எதுவாயினும் ஜனாதிபதி அநுர பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு அறிவிப்பு விடுத்தபோது, நாடு பூராகவும் உள்ள அரசியல்வாதிகள் பொதுத் தேர்தலில் முழுக் கவனத்தையும் செலுத்த, புதிய ஜனாதிபதியை நோக்கிய விமர்சனங்கள் மௌனித்துள்ளன.

தேர்தல் முடிவுற்ற பின்புதான் நிலைமை எப்படியாகும் என்பதை எதிர்வுகூற முடியும்.

ஆக, பொதுத் தேர்தல் ஒருபுறமிருக்க, தேர்தல் பிராக்கில் பொது வேலைகளைக் கவனிக்காமல் விட்டு விடாதீர்கள் என்பதைக் கூறுவதற்காகவே அதுபற்றி இங்கு பிரஸ்தாபிக்கின்றோம்.

ஆம், இது மழைக்காலம். பொதுவில் மழை வெள்ளம் வழிந்தோடுவதற்கான வடிகால் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் அவை சரியான முறையில் பராமரிக்கப்படாத விடத்து, நிலைமை மோசமாகும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

உதாரணத்துக்கு கடும் மழை பெய்கின்ற போது யாழ்ப்பாண நகரத்தில் வெள்ளம் தேங்குகின்ற நிலைமை கடந்த வருடங்களில் ஏற்பட்டுள்ளது.

இதற்கு மூலகாரணம் வெள்ளவாய்க்கால்கள் உரியவாறு பராமரிக்கப்படாமையாகும்.

அதாவது வடிகால்களுக்குள் கழிவுகளைக் கொட்டுகின்ற மிகமோசமான காரியம் எமது பகுதிகளில் நடந்தாகின்றன.

இத்தகைய கழிவுகள் அகற்றப்படாத பட்சத்தில் வெள்ளம் வழிந்தோட வழியின்றி யாழ்.நகரத்துக்குள் தேங்கி; வர்த்தக நிலையங்களுக்குள் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

இதுதவிர, தாழ் நிலங்களில் குடியிருக்கின்ற மக்களும் மழை காலத்தில் தமது இல்லிடங்களை விட்டு வெளியேறி கோவில்களிலும் பொது இடங்களிலும் தஞ்சம் அடைகின்ற துர்ப்பாக்கிய நிலைமைகளும் நடப்பதுண்டு.

எனவே பொதுத் தேர்தலோடு காலத்தைக் கடத்திவிடாமல், மாரி காலத்தில் வெள்ளம் பெருகி, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருப்பதற்குரிய அத்தனை வேலைத்திட்டங்களையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முழு வீச்சில் செய்வது மிகவும் அவசியமானதாகும்.

## ஜனாதிபதியின் படங்களை பயன்படுத்த எழுத்துமூல அனுமதி பெறப்பட வேண்டும்

### ஜனாதிபதியின் செயலாளர்

(கொழும்பு)

பல்வேறு நிகழ்வுகளுக்காக பெயர்ப் பலகைகள் மற்றும் விசேட நினைவுச் சஞ்சிகைகளுக்கு ஜனாதிபதியின் புகைப்படங்கள் மற்றும் வாழ்த்துச் செய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தின் எழுத்துமூல அனுமதியை அனைத்து அரச நிறுவனங்களும் பெறுமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

குறித்த விடயத்தினை ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன், அரச நிதியைப் பெற்று மேற்கொள்ளப்படும் பணிகளை ஏற்பாடு செய்யும்போது அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக செயற்படுவது அவசியமானது எனவும் ஜனாதிபதியின் செயலாளர் அரச நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார்.

மேலும், அனைத்து அமைச்சின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபன சபைகள் உள்ளிட்ட சட்டபூர்வ நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுத்து மூலம் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார். (ம)

## மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக

### நீதிமன்றால் குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு கிரேக்க பொருளாதாரம் கடும் நெருக்கடியான நிலையைச் சந்தித்திருந்த நிலையில் அரசாங்கத்திற்கு சொந்தமான பணத்தை கிரேக்க பிணை முறிகளில் முதலீடு செய்தமை காரணமாக நாட்டுக்கு 1.8 பில்லியன் ரூபாவிற்கும் அதிக அளவில் நட்டம் ஏற்படுத்தியதாக இந்த நான்கு பேருக்கு எதிராகவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவினால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் சந்தேக நபர்கள் பிணையில் செல்ல நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தலா 10 மில்லியன் பெறுமதியான சரீர பிணைகளின் அடிப்படையில் இந்தச் சந்தேக நபர்கள் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் இந்த சந்தேக நபர்கள் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளத் தடை விதித்துள்ளதுடன் தங்களது கடவுச்சீட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் அறிவித்துள்ளது.

வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் நீதிமன்றின் அனுமதியுடன் பயணங்களை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பாரிய அளவு நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக அஜித் நிவாட் கப்ரால் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மோ.சைக்கிள் விபத்து பெண் உயிரிழப்பு

அவிசாவளை - கொழும்பு வீதியில் பாதுக்க மாவத்தகம கொடிகஹகந்த மாவத்தைக்கு அருகில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பாதுக்க பொலிஸார் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான இரு மோட்டார் சைக்கிள்களும் பஹத்கமையில் இருந்து மீபே நோக்கிப் பயணித்துள்ளதுடன், அதே திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது உயிரிழந்த பெண்ணின் கணவரும் மற்றைய மோட்டார் சைக்கிளின் சாரதியும் சிறு காயங்களுடன் பாதுக்க மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்த பெண்ணின் சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பாதுக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## ஒக்ரோபர் மாதத்தின் முதல் 6 நாட்களில்

### 25 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை

இவ்வருடத்தில் ஒக்ரோபர் மாதத்தின் முதல் 6 நாட்களில் 25 ஆயிரத்து 966 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்தியாவிலிருந்து 7ஆயிரத்து 749 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 2 ஆயிரத்து 437 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து ஆயிரத்து 737 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

இவ்வருடத்தின் இது வரையான காலப் பகுதிக்குள் 15 இலட்சத்து 10 ஆயிரத்து 774 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 94 ஆயிரத்து 305 ஆகும்.

மேலும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 125 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 294 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## அஞ்சல் மூல வாக்களிப்பு திகதிகள் அறிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு நடத்தப்படும் திகதிகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, மாவட்டச் செயலக வளாகத்தில் உள்ள அனைத்து அலுவலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் துறையுடன் தொடர்புடைய காரியாலயங்களைச் சேர்ந்தவர்களுக்கு அஞ்சல் வாக்களிக்க எதிர்வரும் 30ஆம் திகதி மற்றும் நவம்பர் 4 ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பிற அரச நிறுவனங்கள் மற்றும் இராணுவ முகாம்களைச் சேர்ந்தவர்கள் நவம்பர் மாதம் முதலாம் மற்றும் நான்காம் திகதிகளில் அஞ்சல் வாக்கினைப் பதிவு செய்ய முடியும்.

அதேநேரம் குறித்த தினங்களில் அஞ்சல்மூல வாக்கினைப் பதிவுசெய்ய முடியாதவர்களுக்காக எதிர்வரும் நவம்பர் 7ஆம் மற்றும் 8 ஆம் திகதிகள் அஞ்சல் மூல வாக்களிப்புக்கான மேலதிக நாட்களாக ஒதுக்கப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1917 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது சட்டவாக்கச்சபையின் படித்த இலங்கையருக்கான இரண்டாவது தேர்தலிலும் சேர் பொன் இராமநாதனே வெற்றிபெற்றார். அதற்கும் சாதிவாதமே காரணமாக இருந்தது.

**(3) மனிங் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு யாப்பின்படி சட்டமன்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கை (1921-1924)**

1920 இல் இலங்கைச் சட்டவாக்கச்சபை மனிங் ஆணைக்குழுவினால் மேலும் மறுசீரமைக்கப்பட்டு அங்கத்தவர்களின் எண்ணிக்கை 21இல் இருந்து 37 ஆக அதிகரிக்கப்பட்டதோடு பதவி நிலை பெறா அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10இல் இருந்து 23 ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் 7 அங்கத்தவர்கள் (கண்டிச் சிங்களவர்-2, இந்தியத் தமிழர் -1, முஸ்லீம் -1, விஷேட ஈடுபாடுகளுக்கு அங்கத்தவர்கள் -3) ஆளுநரால் நிய மிக்கப்பட்டனர். மிகுதி 16 அங்கத்தவர்களும் ஆட்புல/பிரதேச ரீதியான (territorial) தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

அதாவது 11 ஆட்புல/பிரதேச ரீதியான தேர்தல் தொகுதிகள் கொண்ட 16 தேர்தல் மாவட்டங்களாக திருத்தியமைக்கப்பட்டு மிகுதி 16 அங்கத்தவர்களும் (மேல் மாகாணம் -2 கொழும்பு-1 ஏனைய 8 மாகாணங்களுக்கும் (1இன் படி) -8 , பறங்கியர்-1, ஐரோப்பியர் -2, தாழ்நில உற்பத்திகள் சங்கம் -1, வர்த்தக சங்கம்-1 தெரிவு செய்யப்பட்டார்கள். மனிங் ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி தெரிவு செய்யப்படக் கூடிய சிங்களவர் : தமிழர் : முஸ்லீம் விகிதம் 13 :3 :1 ஆகக் காணப்பட்டது.

மனிங் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு யாப்பின்படி மூன்றாவது சட்டவாக்கச்சபைத் தேர்தல் 1921இல் நடைபெற்றது. 1921ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டவாக்கச் சபைக்கான தேர்தலில் வட மாகா ணத்திலிருந்து வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சட்டத்தரணி வைத்திலிங்கம் துரைசுவாமி தெரிவு செய்யப்பட்டதோடு கிழக்கு மாகா ணத்திலிருந்து நல்லூரை பூர்வீகமாகக் கொண்ட மட்டக்களப்பில் வாழ்ந்த சட்டத்தரணி இம்மானுவேல் ராசநாய கம் தம்பிமுத்து போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

**(4)மனிங்-டெவென்சயர் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு (1924-1931)**

மனிங்-டெவென்சயர் ஆணைக் குழுவின் அரசியலமைப்பு என்பது இலங்கையில் 1924 முதல் 1931ஆம் ஆண்டு வரை பிரித்தானியரால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நான்காவது அரசியலமைப்பாகும்.

1923இல் இலங்கைச் சட்டவாக்கச் சபை மனிங்-டெவென்சயர் ஆணைக் குழுவினால் மேலும் மறுசீரமைக் கப்பட்டு. அங்கத்தவர்களின் எண்ணிக்கை 37இல் இருந்து 49 ஆக அதிகரிக்கப்பட்டதோடு பதவிநிலை பெறா அங்கத்தவர்களின் எண்ணிக்கை 23இல் இருந்து 37 ஆக அதிகரிக்கப்பட்டது. உத்தியோக சார்புள்ளோர் எண்ணிக்கை 12 ஆகும்.

முன்னைய அரசியலமைப்புகளை விட மனிங்-டெவென்சயர் அரசியலமைப்பில் முதல் தடவையாக உத்தியோக சார்பற்றோர் எண்ணிக்கை உத்தியோக சார்புள்ளோர் எண்ணிக்கையை வி. 3 மடங்கு அதிகரிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

இதில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை 29 ஆக இருந்தது. இதில் பிரதேச ரீதியாக 23 அங்கத்தவர்களும் இனரீதியாக 6 அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். அதன் விரம் கீழ்வருமாறு.

தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை 29 அதில் பிரதேச ரீதியாக 23 அங்கத்தவர்கள்: மேல்மாகாணம் -5,மத்திய மாகாணம்- 2, தென் மாகாணம்-3, வடமாகாணம்-3, வட மேல் மாகாணம்-2, கிழக்கு மாகாணம் -2, வடமத்திய மாகாணம்- 1, ஊவா மாகாணம்- 1, சப்ரகமுவ மாகாணம் -2, கொழும்பு நகரம் -2.

இனரீதியாக 6 பேர் தெரிவு செய்யப் பட்டனர்: நாட்டுப்புற ஐரோப்பியர் - 1, நகர்ப்புற ஐரோப்பியர்- 1,வர்த்தக ஐரோப்பியர-1,பறங்கியர்- 2, மேல் மாகாணத் தமிழர் - 1 மிகுதி 8 பதவிநிலை பெறா அங்கத்தவர்களும் பின்வருமாறு நியமிக்கப்பட்டனர்: முஸ்லீம்- 3, இந்தியர் - 2, சிறப்பு-3. மனிங்-டெவென்சயர் ஆணைக் குழுவின் பரிந்துரையின்படி தெரிவு செய்யப்படக் கூடிய சிங்களவர் : தமிழர் : முஸ்லீம் விகிதம் 16 : 8 : 3 ஆகக் காணப்பட்டது.

**4 வீதத்தினர் மட்டுமே தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப்பெற்றிருந்தனர்.**

இவ்வாறு தேர்தல் முறை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டபோதும் இலங்கைச் சனத் தொகையின் 4% (கிட்டத்தட்ட 205,000 மக்கள்) மட்டுமே தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**டொனமூர் அரசியலமைப்பு**

டொனமூர் அரசியலமைப்பு என்பது பிரித்தானிய இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாவது அரசியலமைப்பாகும். 1924 முதல் அமுலில் இருந்த மனிங்-டெவென்சயர் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு, டொனமூர் ஆணைக்குழு மூலம் திருத்தியமைக்கப்பட்டு இவ் அரசியலமைப்பு உருவானது.

**21 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண் பெண்களுக்கும் சர்வசன வாக்குரிமை**

டொனமூர் அரசியலமைப்பின் முக்கிய விடயங்கள்: - 21 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண் பெண்களுக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கியமை. இலங்கைச் சட்டவாக்கச்சபைக்குப் பதிலாக இலங்கை அரச சபைஅமைத்தமை. சுதேச மக்களுக்கு நிர்வாகத்தில் ஈடுபட நிர்வாகக் குழு முறையை ஏற்படுத்தியமை. உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புகளை வழங்கியமை

**இலங்கை அரச சபையின் கட்டமைப்பு**

மொத்த உறுப்பினர்கள் 61 சர்வசன வாக்குரிமை மூலம் 50 உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டனர். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத சிறுபான்மையோரின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 8 பேர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இதை விட பதவிநிலை பெற்ற 3 பேர் - பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டத் துறை நாயகம் ஆகியோர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இம் மூன்று பேருக்கும் அரச சபையில் வாக்களிக்கும் உரிமையிருக்கவில்லை. இலங்கை அரச சபை சட்டங்களை ஆக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. இச்சட்டங்களை அமுல்படுத்த ஆளுநரின் அங்கீகாரம் அவசியம். உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புகள் உள்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டமை இங்கு முக்கிய அம்சமாகும்.

**டொனமூர் அரசியலமைப்பின்படி தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்**

75,000இற்கு குறையாத 100,000 -125,000 இடைப்பட்ட மக்கள் தொகைக்கு ஒரு ஆசனம் எனும் அடிப்படையில் எல்லா (50) ஆசனங்களும் ஆட்புல / பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்வதற்கு 1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ரொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இறுதியாக நடத்தப்பட்ட 1921 ஆம் ஆண்டின் சனத்தொகை கணக்கெடுப்புக்கமைய (கிட்டத்தட்ட 4.5 மில்லியன் மக்கள்) நடவடிக்கை யெடுப்பதென எல்லை நிர்ணய ஆணைக்குழு தீர்மானித்ததோடு 90,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆசனம் எனும் அடிப்படையில் 50 ஆசனங்களும் ஆட்புல / பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்தது.

தமிழர்கள் வட மாகாணத்திற்கு 7 ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று எல்லை நிர்ணய ஆணைக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்த போதும் அது எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

ரொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழு தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வதற்கு மாகாணத்தின் பரப்பளவை கணக்கிலெடுக்காமல் சனத்தொகை விகிதாசாரத்தை மட்டும் கருத்தில் எடுத்தது ஒரு குறைபாடாகச் சொல்லப்படுகிறது.

உதாரணமாக இலங்கைப் பரப்பளவின் 5.6% ஐக் கொண்ட மேல் மாகாணத்திற்கு 28% மான ஆசனங்களும் இலங்கைப் பரப்பளவின் 15.9% ஐக் கொண்ட வட மத்திய மாகாணத்திற்கு 2% ஆன (ஒரு ஆசனம் மட்டும்) ஆசனங்கள் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது கவனிக்கத்தக்கதாகும்.

**தமிழ்ப் பிரதிநிதித்துவ விகித வீழ்ச்சி**

டொனமூர் அரசியலமைப்பின் எல்லை நிர்ணயத்தின் படி இது வரையில் தமிழர்- சிங்கள வருக்கிடையே இருந்த பிரதிநிதித்துவ விகிதம் 1:2 இலிருந்து 1:5 ஆக மாறியது. இது தமிழர்களுக்கு அரசியலில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியது.

இவ் எல்லை நிர்ணயத்தின் படி வடமாகாணத்திற்கு கிடைத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 5 ஆகும். இத் தேர்தல் தொகுதிகளின் பெயர்கள்- ஊர்காவற்றுறை , காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், பருத்தித் துறை, மன்னார், முல்லைத்தீவு ஆகும்.

கிழக்கு மாகாணத்திற்கு கிடைத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 2 ஆகும். இத் தேர்தல் தொகுதிகளின் பெயர்கள்- மட்டக்களப்பு தெற்கு மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகும்.

**முதலாவது இலங்கை அரச சபைத் தேர்தல் 1931**

இவ் எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் முதலாவது தேர்தல ஜுன் 1931 இல் நடைபெற்றது. இத்தேர்தலில் வட மாகாணத்திற்கான 5 தொகுதிகளில் மன்னார்-முல்லைத்தீவு தவிர்ந்த மற்றைய 4 தொகுதிகளில் தமிழ் மக்களின் விரக்தியால் ஏற்பட்ட பகிஷ்கரிப்பால் தேர்தல் நடைபெறவில்லை.

**பகிஷ்கரிப்பு கைவிடப்படல்**

புது அரசியலமைப்பில் தமிழ் மக்களின் நலவுரிமைகளுக்கு ஏற்ற முறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லையென அவர்கள் அதிருப்தி கொண்டமையே இப் பகிஷ் கரிப்பிற்கு பிரதான காரணமாகும். இப் பகிஷ்கரிப்பு பின்னர் கைவிடப்பட்டு இதற்கான இடைத்தேர்தல்கள் 1934 ஆம் ஆண்டு நடைபெற்றது. இவ்விரு தேர்தல்களிலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு காணப்பட்டது.

தாழ்பிரதேச சிங்களவர் -28, கண்டிச் சிங்களவர் -10,இலங்கைத் தமிழர்கள் -7, இந்தியத் தமிழர்கள்-2, ஐரோப்பியர் -2, முஸ்லீம் -1.ஆளுநர், 4- ஐரோப்பியர் 2- பறங்கியர் 1- இந்திய வர்த்தகர் 1- மலே இனத்தவர் என்ற ரீதியில் மற்றைய எட்டு இடங்களுக்கும் உறுப்பினர்களை நியமனம் செய்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 17 இந்திய...

மன்னார் நீதவான் நேற்று வியாழக் கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இரண்டு இந்திய இழுவைப் படகுகளையும் அதிலிருந்த 17 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

பின்னர் குறித்த மீனவர்களையும், இழுவைப் படகுகளையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு 2 வருட சிறைத் தண்டனை 20 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்ததுடன் நபருக்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து விடுதலை செய்யப் பட்டனர். (ம-285)

## முள்ளிவாய்க்...

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடி அகழ்வுப் பணி மூன்றாவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவுப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் உள்ள இளம் ஒளி விளையாட்டுக் கழக மைதானத்தில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்து அகழ்வுப் பணி இடம் பெற்று வருகிறது.

கொழும்பு நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த அகழ்வுப் பணியானது கொழும்பில் இருந்து வருகைதந்த பொலிஸ் குழுவினரால் கடந்த 8ஆம் திகதி மாலை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, நேற்று முன்தினம் (09) வரை எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் இடைநிறுத்தப்பட்டு நேற்று (10) காலை மீளவும் தண்ணீர் அகற்றும் பணி இடம்பெற்று மூன்றாம் நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் அண்ணளவாக 11 இற்கும் மேற்பட்ட இடங்களில் இதுவரை அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற நிலையிலும் எதுவும் கிடைக்காமல் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ம)

## தமிழரசுக்...

யாழ்.தேர்தல் மாவட்டத்தில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச. சுகிர்தன், கேசவன் சயந்தன், இமானு வேல் ஆர்னோல்ட் மற்றும் தி.பிரகாஷ், ச.இளங்கோ, ச.சுரேக்கா, சி. கிருஷ்ண வேணி ஆகியோர் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர். (ம-33)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## மருத்துவர்...

கட்டுப்பணத்தினைச் செலுத்தினார்.

மருத்துவர் அர்ச்சுனா சுயேட்சையாக போட்டியிடவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம)

## மிளகாய்த்...

பிணக்கு ஒன்று இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த காணியில் மாமன் மற்றும் மருகன் ஆகிய இருவரும் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த நபர்கள் குறித்த இருவர் மீதும் மிளகாய்த்தூளை அள்ளி வீசிவிட்டு அவர்களை விரட்டி வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதாக ஊர்மக்கள் தெரிவித்தனர்.

இதில் இளங்கோ ஸ்தலத்திலேயே உயிரிழந்ததோடு 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின தந்தையான ரூ.திலீபன் படுகாயமடைந்த நிலையில் உறவினர்கள் மற்றும் ஊர் மக்களால் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் உடல் வவுனியா வைத்தியசாலையில்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

## தீயில் எரிந்த...

நேற்று முன் தினம் புதன்கிழமை தனது வீட்டுக்குச் சென்றதாகவும் நேற்று வியாழக்கிழமை முற்பகல் அவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாகக் காணப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-60)

## 11 ஆயிரம்...

வான காணி இவ்வாறு வழங்கப்படவுள்ளதுடன், அதற்கென ஒழுங்கான பொறிமுறைமையொன்றைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் சந்தித்தபோதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார். (ம)

## ஜன...

டத்தில்சுயேட்சைக் குழுவாக இப் புதிய கட்சி போட்டியிடவுள்ளது.

இதில் தமிழரசுக் கட்சியில் அதிருப்தியடைந்துள்ளவர்கள் மற்றும் வேறு சில கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரையும் உள்ளடக்கி இக் கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேட்புமனுவை இன்று காலை 9 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்யவுள்ளனர்.

இக்கட்சியின் உருவாக்கம் மற்றும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் இதன் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா நேற்று ஊடக சந்திப்பில் இதனை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அமெரிக்காவின்...

கொடுத்தல், கடல்சார் பிராந்தியங்கள் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவது மற்றும் அனர்த்தங்களை எதிர் கொள்ளும் திறனை மேம்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதம் போன்ற சர்வதேச அச்சுறுத்தல்களுக்கு எதிராகப் போராடுவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்த அட்மிரல் கோஹ்லர், போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளையும் பாராட்டினார்.

கடற்படைப் பிரிவின் மனிதவளப் பயிற்சிக்கு அமெரிக்காவின் ஆதரவு தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கப்படும் என அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார். (ம)

## புத்தூரில்...

(வயது-71) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கணவன் இறந்த நிலையில் இப் பெண் தனிமையில் வசித்து வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார். (ம)


மஹஜன சம்பத
திகதி 2024.10.10
சீட்டிழுப்பு இலக்கம் 5621
X 7 4 7 8 9 8
அத சம்பத X 7 8 9 8
சீட்டிழுப்பு இலக்கம் 196

தன நிதானய
திகதி - 2024.10.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1651
I 06 18 42 61 I
14898

மெகா பவர்
திகதி 10/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1969
M 24 08 19 31 71
89683

லக்ஸி 7 VIP
திகதி 2024.10.10
சீட்டிழுப்பு இலக்கம் 0447
W 7 8 7 6 4 2 W

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3863
சீட்டிழுப்பு திகதி 10.10.2024
O 37 39 59 61
O 45080

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.10
சீட்டிழுப்பு இலக்கம் 930
மேஷம் 01 05 16 30 மேஷம்
88440 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.10.2024 வெற்றி வாரம் 329 வர்ணம் மஞ்சள்
O 4 7 9 3 8 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,537,328.00
68900

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2595 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 10.10.2024 தினம் வியாழன்
24 28 58 69 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,319,530.40

சனிதா
திகதி 2024.10.10 வெற்றி வாரம் 4756 வர்ணம் சிவப்பு
33 36 59 74 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,635,066.40
45109

சீட்டிழுப்பு வாரம் 4307 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.10.10 தினம் வியாழக்கிழமை
07 30 32 33
ரூ. 5,759,371.20
120037

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 29 21 68 72 74
1771
10.10.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 549,694,053.40

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2421
சீட்டிழுப்பு திகதி : 2024.10.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,429,460.00
03 50 55 57 M
900883


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Save a Life

## ஆரோக்கியமான வாழ்க்கை!
## ஆரோக்கியமான தேர்வுகள்!
## Healthy Lives!
## Healthy Choices!

# கண்காட்சி

சனிக்கிழமை

**12 October 2024**

காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை
இடம் : தந்தை செல்வா கலையரங்கம், யாழ்ப்பாணம்.

Supported by : Diakonia

(2258)

# காணி விற்பனைக்கு

யாழ். மல்லாகம் பழைய கோட்ஸ் அடி வீதி K.K.S Road இல் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- நன்னீர் ஊற்று
- குடியிருப்பு சூழல்
- பார்வையிடும் நேரம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை

(2269)

**077 638 5683**
**076 755 8606**

# சிங்கள வகுப்பு

2025 தரம் 6, 7, 8, 9 மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களத்திற்கான புதிய வகுப்புகள் விஜயதசமி (12.10.2024) மாலை மூன்று மணிக்கு ஆரம்பமாகும்.
அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.

இடம் : இலங்கை வேந்தன் மண்டபம் அருகில்
கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (2273)

**077 990 6867**
**077 214 0220**



# அகரம்
## உயர்நிலைக் கல்லூரி
## AHARAM HIGH STANDARD COLLEGE

காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

## புதிய கல்வி ஆண்டு -2024

புலமைப்பிரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

12.10.2024 (சனிக்கிழமை)

விஜயதசமி நன்னாள் அன்று மாலை 3.02 - 4.32

அனுமதிகளை 09.10.2024 இருந்து பெற்றுக் கொள்ளலாம்

குறிப்பு :
ஆரம்பிக்கும் நாள் முதல் தைமாதம் வரை நடைபெறும் வகுப்புக்களிற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டா!

(2251)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

# Village Hotel
## Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)

தொடர்புகளுக்கு : (2240)

**077 544 8503**

# தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் NEW SCIENCE HALL கல்வி நிறுவனத்திற்கு தமிழ், ஆங்கில கணனி அறிவுடைய பெண் ஊழியர் தேவை.

(C-1374)

**077 791 7611**

# வீட்டுப் பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வீட்டுச் சமையலுக்கு உதவி செய்தல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க பணியாளர் உடன் தேவை.

(418)

**078 731 1049**

# வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

# புலமை கல்வி நிறுவனம்
# PULAMAI INSITUTE

சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்.
(சத்தியசாயி பாடசாலையிலிருந்து 100m தூரத்தில்)

## தரம் - 4 (2026), தரம் - 5 (2025) மாணவர்களுக்கான புலமைப்பரிசில் புதிய வகுப்புக்கள் விஜயதசமி அன்று ஆரம்பம்

12.10.2024 சனிக்கிழமை(விஜயதசமி அன்று)
ஆசிரியர் : திரு.க.கலாமோகன் (B.A,P.G.D.E, Dip in Teaching)

தரம் - 4 (தற்போது தரம் - 3) நேரம் : மாலை 3.10 மணி
தரம் - 5 (தற்போது தரம் - 4) நேரம் : மாலை 4.00 மணி

பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பதிவுகளுக்கு முந்தவும்.

(2265)

தொடர்பு இலக்கம் : **077 212 1915**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி விக்னேஸ்வரன்(விக்னா) விக்னேஸ்வரி தம்பதியினரின் செல்வப் புதல்வனும் சாய்தாவின் சகோதரனும் யாழ். இந்துவின் மைந்தனுமான

செல்வன் **வி.விக்னகஜன்**

சென்ற 04.10.2024 அன்று கொழும்பு பல்கலைக்கழகத்தினால் BMICH இல் நடைபெற்ற 2023 இற்கான பட்டமளிப்பு விழாவில் கணனி விஞ்ஞானப் பிரிவில் (BSc 2nd Upper) பெற்றமையினையிட்டு இவரை அகமகிழ்ந்து வாழ்த்துவதோடு இன்னும் பல பட்டங்கள் பெற வேண்டும் என மண்டைதீவு திருவெண்காட்டு சித்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(2270)

வாழ்த்துவோர் : உறவினர்கள்




# மரண அறிவித்தல்

# குலசேகரம் கனகேஸ்வரி

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம் கனகேஸ்வரி அவர்கள் 10.10.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.10.2024 வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
P. ரமணன் (மருமகன்)
077 706 4345

குளக்கோட்டம்,
ஊரெழு கிழக்கு.

(2271)

# நேரடி ஒளிபரப்பு(Live)

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும்(ஆலய திருவிழாக்கள், கலாசார நிகழ்வுகள், மங்கள சுபகாரியங்கள், விளையாட்டுப் போட்டிகள், மரணச் சடங்குகள், ஏனைய நிகழ்வுகளை வெளிநாடுகளில் உள்ளவர்கள்(Full HD) குறைந்த கட்டணத்தில் பார்வையிட அழையுங்கள்.

**074 000 9519**

# யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(417)

## APEX TRAVELS

**0777 597 598, 076 3333 644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ஜெட்விங் ஹோட்டல் தரிப்பிடத்திற்கு அருகில்)

# அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
**2026ல் நீங்களும் அமெரிக்காவில்...**
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் **0768226244**

எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் | விண்ணப்ப முடிவு திகதி **05-11-2024**

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0777068777 | கொடிகாமம் 0764550675 | சாவகச்சேரி 0768226242 | [illegible] 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | பண்டத்தரிப்பு 0777718322 | சங்கானை 0777726322 | கோப்பாய் 0764550674 | புத்தூர் 0764550671 | [illegible] 0777720322 |
| நெல்லியடி 0776699892 | V2 Travels | | வேலணை 0743900353 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697980 |

# வங்கி மீதி வசதி
# (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதி

(415)

**074 173 7684**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.